**15.07.2025**

**O.S.No.32/2017**

**பி.வா.சா.2 : சம்பத்**

**<u>1 முதல் 4 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

17) 21.09.2010 பாக பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில்தான் நானும் (33 பிரதிவாதி) 14 வது பிரதிவாதியும் கிரயம் பெற்றுள்ளோம். 21.09.2010 பாகப்பிரிவினை பத்திரத்தில் அந்த சொத்து ராம கவுண்டருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற மூல பத்திர பற்றிய விவரங்கள் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பழனிமுத்து கவுண்டர் பாத்தியப்பட்ட சொத்துக்கள் வா.சா.ஆ.24,25 ஆவணங்களின் படிதான் அவர்களது குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது.

18) மேற்படி பழனிமுத்து கவுண்டர் இறந்தது பின்னிட்டு அவரது சொத்துகள் வாரிசுகளான ராம கவுண்டர், முனியம்மாள், மாரியம்மாள், மணி ஆகியோருக்கு சமமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 21.09.2010 பாக பிரிவினையில் மாரியம்மாள் பாக பிரிவினை எதுவும் செய்து கொள்ள வில்லை என்றால் சரிதான். கையெழுத்து செய்யவில்லை. மாரியம்மாள் அவர் பாகத்தை பொறுத்து யாருக்கும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனவே மாரியம்மாள் பாகத்தை பொறுத்து ராம கவுண்டர் வாரிசுகள் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் மாரியம்மாள் பாகத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான்.

19) எனவே, அந்த பாகப்பபிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரமும் கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். எனவே, மாரியம்மாளுக்கு பாத்தியப்பட்ட 98-3/4 செண்ட் பாகத்தை மாரியம்மாளுக்கு வழியிட பாத்தியம் மற்றும் கிணறு பாத்தியம் 1/4 கொடுப்பதில் எனக்கு எந்த ஆட்சேபணை இல்லை. 98-3/4 செண்ட் சொத்து பரமேஸ்வரியிடம் கவிதா ஒப்பந்தம் போட்டுள்ளார்.

20) அந்த ஒப்பந்தப்படி கிரயம் கொடுக்காததால் அசல் வழக்கு எண்.131/2014 என்ற வழக்கு போட்டுள்ளார். அந்த வழக்கை வாபஸ் பெற்று

கொண்டு அந்த ஒப்பந்த தொகை பெற்றுக்கொண்டு ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டேன். அதனால் வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே, தாவாப்படி 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியம் 4ல் ஒரு பாகம் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.07.15 18:09:16 +0530

**Subordinate Judge, Attur.**